(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 18.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2022 ஒக்தோபர் 03 திங்கட்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

29/2022

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரத்தியேக வகுப்புகளை நடத்திவருகின்ற நிறுவனங்களின் தரநியமங்களை ஒழுங்குறுத்துவதற்கான ஓர் அரச நிறுவனம் உண்டா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்த நிறுவனத்தின் பெயர் யாது என்பதையும்;

(iii) அதன் பணிப்பொறுப்புகள் யாவை என்பதையும்;

(iv) அத்தகைய ஒரு நிறுவனம் தாபிக்கப்படவில்லையெனின், அதற்கென ஒரு நிறுவனத்தைத் தாபிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

30/2022

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள பரீட்சைமைய கல்வி முறையின் காரணமாக மாணவர்கள் மிகுந்த அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

(ii) இதனால் இவர்களின் படைப்பாற்றல் மற்றும் ஆளுமை விருத்திக்கு இடையூறு ஏற்படுவதையும்;

(iii) தற்போதுள்ள கடுமையான போட்டிநிலை மற்றும் களைப்பை உண்டுபண்ணும் கல்வி முறை மாறவேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய கல்விச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவிருக்கும் திகதி யாது என்பதையும்;

(iv) குறித்த சீர்திருத்தங்களுக்காக செலவிட எதிர்பார்க்கப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) அத்தொகையில் பாடசாலை முறைமையின் பௌதீக அபிவிருத்திக்கும், மனிதவள அபிவிருத்திக்கும் செலவிட எதிர்பார்த்துள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

343/2022

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் பாடசாலை முறைமையின் தரத்தை மேம்படுத்துவதற்காக கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறும் ஆசிரியர்கள் பாரிய செயற்பொறுப்பினை நிறைவேற்றி வருகின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள கல்வியியற் கல்லூரிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) கடந்த ஐந்து வருட காலத்தில் அத்தகைய ஒவ்வொரு கல்வியியற் கல்லூரியிலிருந்தும் கற்கை நெறிகளைப் பூர்த்திசெய்து வெளியேறிய ஆசிரியர்களின் எண்ணிக்கை, ஒவ்வோராண்டு வாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) கல்வியியற் கல்லூரிகளில் கற்கை நெறிகளைப் பயில தெரிவுசெய்யப்படும் ஆசிரிய-மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான ஒரு வேலைத்திட்டம் உண்டா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அந்த வேலைத்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1529/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுர மாவட்டத்திலுள்ள அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி பாடசாலைகளில் கற்பிக்கப்படும் ஒவ்வொரு பாடத்திற்கமைவாக —

(i) அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை;

(ii) தற்போது சேவையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை;

(iii) தற்போது காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை;

தனித்தனியாக எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி (ஆ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

2002/2022

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த சனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலின்போது வாக்குறுதி அளிக்கப்பட்டதன் அடிப்படையில், ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் சம்பள முரண்பாட்டினை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டமானது ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு ஏற்ற வகையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களினது சம்பள முரண்பாட்டினை நீக்குகையில் அவர்களுக்குரிய நிலுவைச் சம்பளங்களை செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

2043/2022

கௌரவ வேலு குமார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கண்டி மாவட்டத்தில் தேசியப் பாடசாலைகளாக உள்வாங்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கையையும்;

(ii) அவற்றில் சிங்கள மொழிப் பாடசாலைகள், தமிழ் மொழிப் பாடசாலைகள் என்றவகையில் வெவ்வேறாக அவற்றின் எண்ணிக்கையையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) தேசிய பாடசாலை ஒன்றுக்கான நியமனங்களுக்கு அமைய, பாடசாலை கொண்டிருக்க வேண்டிய தளப்பரப்பு, மாணவர் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதை வெவ்வேறாகவும்;

(ii) மேலே (அ) (i) இல் உள்ள தேசியப் பாடசாலைகள் அவ்வாறான நியமனங்களுக்கு உட்பட்டவையா என்பதையும்;

(iii) அவ்வாறு இல்லையெனில், அப்பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக உள்வாங்கப்பட்டதற்கான அடிப்படை என்ன என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

3152/2022

கௌரவ மிலான் ஜயதிலக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023 ஆம் ஆண்டுக்காக தேவைப்படும் பாடசாலை பாடப் புத்தகங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி பாடப் புத்தகங்கள் தற்போது அச்சிடப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2023 ஆம் ஆண்டுக்காக பாடசாலை சீருடைகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சீருடைகளுக்காக செலவாகும் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) 2023 ஆம் ஆண்டுக்காக தேவைப்படும் பாடசாலை சீருடைகளுள் உள்நாட்டு ரீதியாகவும் வெளிநாட்டு ரீதியாகவும் கொள்வனவு செய்யப்படும் அளவுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

2660/2022

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் காணப்படுகின்ற மீன்பிடித் துறைமுகங்களினதும் நங்கூரத் தளங்களினதும் எண்ணிக்கை;

(ii) தற்பொழுது நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற மற்றும் எதிர்காலத்தில் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள நங்கூரத் தளங்களின் எண்ணிக்கை;

எத்தனையென்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மீன்பிடிச் சாதனங்களையும் உபகரணங்களையும் நிவாரண விலையில் விற்பனை செய்வதற்கு வேலைத்திட்டமொன்று உருவாக்கப்படுமா என்பதையும்;

(ii) மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் நங்கூரத்தளங்கள் ஊடாக இடையறாது எரிபொருள் வழங்குவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்படுமா என்பதையும்;

(iii) மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்களின் தற்போதைய செயற்பாடு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

294/2022

கௌரவ வசந்த யாப்பாபண்டார,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கண்டி குட் ஷெட் பேருந்து நிலையத்தை நவீனமயப்படுத்தும் பணிகள் நிறைவு செய்யப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) அப்பேருந்து நிலையத்தை நவீனமயப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) குட் ஷெட் பேருந்து நிலையத்தை நவீனமயப்படுத்துவதற்கு ஒருங்கமைவாக கண்டி புகையிரத நிலையமும் நவீனமயப்படுத்தப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கண்டி தீயணைப்புப் படை தலைமையகத்திற்கு அருகாமையில் சுரங்கப் பாதையொன்றை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதற்காக செலவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அச்சுரங்கப் பாதையை அமைப்பதற்குரியதாக சுற்றாடல் அறிக்கையொன்று பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அது தொடர்பாக கிரய-நலன் பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

2063/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது தூண்களுக்கு மேலாக நிர்மாணிக்கப்பட்டுவரும் துறைமுக பிரவேச நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளுக்கான மதிப்பீட்டுச் செலவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) இதற்காக நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறை யாதென்பதையும்;

(iv) இப்பணிக்காக நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

2586/2022

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புகையிரத பயணிகளின் வசதியை விரிவுபடுத்தும் நோக்கில் புகையிரத நிலையங்களை நவீனமயப்படுத்தும் கருத்திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்தின் கீழ் நவீனமயப்படுத்தப்படவுள்ள ஒவ்வொரு புகையிரத நிலையத்தினதும் பெயர், குறிப்பிட்ட புகையிரத நிலையம் அமைந்துள்ள மாவட்டத்தின் பெயர், குறிப்பிட்ட கருத்திட்டத்துக்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை, குறிப்பிட்ட கருத்திட்டத்தின் பணிகளை ஆரம்பிக்க உத்தேசித்துள்ள காலகட்டம், இக்கருத்திட்டத்திற்கான திட்டவமைப்பின் பிரகாரம் உள்ளடங்கும் வேலைத்திட்டம் என்பன வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

3085/2022

கௌரவ திஸகுட்டி ஆரச்சி,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் கிளைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தினால் வருடமொன்றில் மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படும் ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளும் போதும் இலகுரக வாகன சாரதி அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளும்போதும் தேவைப்படும் மருத்துவச் சான்றிதழ்களுக்காக அறவிடப்படும் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

3148/2022

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பெனி (லேக் ஹவுஸ்) நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ள காணியையும் அக் கட்டடத்தையும் பிறிதொரு கருத்திட்டத்திற்கு அளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தீர்மானம் மேற்குறிப்பிட்ட நிறுவனத்தின் எதிர்கால இருப்புக்கு எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துமென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

3149/2022

கௌரவ மயந்த திசாநாயக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி, பேராதனை மற்றும் பிலிமத்தலாவை ஆகிய நகரங்களில் நிலவும் அதிக வாகன நெரிசலைக் குறைப்பதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் முன்மொழிந்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ் வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி வேலைத்திட்டம் எப்போது நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1674/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டதிலுள்ள கிராமங்களுக்கு மத்தியில் குடிநீர்ப் பிரச்சினை காணப்படும் கிராமங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மாத்தளை மாவட்டத்தில் காணப்படுகின்ற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

16.

677/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள பாரிய அரிசி ஆலைகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி ஒவ்வொரு அரிசி ஆலை உரிமையாளரதும் பெயர் மற்றும் முகவரி என்பன வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) இன்றளவில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் பாரிய நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளார்கள் என்பதை அறிவாரா;

(iii) ஆமெனில், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களைக் கட்டியெழுப்புவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

17.

969/2022

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள மேய்ச்சல் தரைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) கிழக்கு மாகாண ஆளுநர் மேற்படி மேய்ச்சல் தரைகளில் கமத்தொழிலை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கியுள்ளார் என்பதை அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கிழக்கு மாகாணத்தின் திரவப்பால் உற்பத்தியானது இலங்கையின் மொத்த திரவப்பால் உற்பத்தியின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(ii) திரவப்பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

18.

1515/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் வயற் காணிகளின் பரப்பளவு எத்தனை ஏக்கர்கள் என்பதையும் நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக என்தனை என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 வரையில் நெற் பயிர்ச்செய்கையிலிருந்து விலகியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இக்காலப்பகுதியில் நெல் விவசாயிகளுக்கு உர மானியம் வழங்குவதற்காக செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த உரத்திற்கான தேவைப்பாடு ஒவ்வொரு பயிருக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) 2020 ஆம் ஆண்டில் இரசாயன உரத்தினை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை மற்றும் இறக்குமதி செய்யப்பட்டுள்ள உரத்தின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

19.

1528/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் யானை-மனித மோதல் காரணமாக மரணமடைந்த நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவ்வாறு மரணமடைகின்ற நபரொருவர் சார்பில் வழங்கப்படுகின்ற நட்ட ஈட்டுத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) யானை-மனித மோதலைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

20.

2980/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்க,— (1)

(அ) (i) வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்குரிய வன நிலங்கள் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிலங்கள் உள்ளூர் முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) இன்றேல், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) மேற்படி நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

21.

3116/2022

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யானை – மனித மோதலுக்கு நேரடியாக ஏதுவாக அமைகின்ற காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) யானை – மனித மோதலைத் தீர்ப்பதற்காக அரச சார்பற்ற சுற்றாடல் அமைப்புகளால் முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) மேற்படி முன்மொழிவுகளை மீளாய்வு செய்து அவை தொடர்பில் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) காட்டு யானைகளுக்குத் தேவையான உணவு தட்டுப்பாடு காரணமாக அவை கிராமங்களை நோக்கி வருகின்றன என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) காட்டு யானைகளுக்குத் தேவையான உணவுகளை காடுகளின் மூலமாகவே வழங்குவதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

22.

2582/2022

கௌரவ லலித் வர்ண குமார,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள இணக்கச் சபைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி இணக்கச் சபைகளூடாக இதுவரையில் இணக்கஞ் செய்யப்பட்டுள்ள பிணக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) இணக்கச் சபை முறைமையானது அமைச்சினால் தற்போது மேற்பார்வை செய்யப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இணக்கச் சபை அலுவலர்களின் சேவையினைப் பாராட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இணக்கச் சபை செயற்பாட்டினை காலத்திற்கேற்ற வகையில் மேம்படுத்து வதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

23.

2631/2022

கௌரவ சம்பத் அதுகோரல,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையில் சுற்றுலாத்துறை சார்ந்த தொழில்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக மேற்படி நபர்களது தொழில்வாய்ப்புகள் தொடர்பில் பாரிய ஐயப்பாட்டு நிலை ஏற்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) அவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

24.

2650/2022

கௌரவ யூ. கே. சுமித் உடுகும்புர,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையிலும், மாகாண சபை ஒவ்வொன்றிலும் பதிவு செய்துகொண்டுள்ள சுற்றுலா சாரதிகள் மற்றும் சுற்றுலா வழிகாட்டுநர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(ii) கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக இவர்களின் வருமான மார்க்கங்கள் வீழ்ச்சியடைந்திருப்பதை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், இவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கென எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

25.

2520/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் —

(i) இலங்கையின் வெற்றிலை உற்பத்தி;

(ii) வெற்றிலை ஏற்றுமதியின் மூலம் கிடைத்த வருமானம்;

ஆகியன ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியே எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் வெற்றிலைச் செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசங்கள் யாவை;

(ii) வெற்றிலைச் செய்கையை மேற்கொண்டும் மேம்படுத்துவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

26.

2537/2022

கௌரவ மதுர விதானகே,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் "தேசக்தி" நிதியத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

27.

2885/2022

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் பெருந்தோட்டக் கம்பெனிகளுக்குச் சொந்தமான தோட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி தோட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள பயிர் வகைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பயிரினதும் வருடாந்த விளைச்சல் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு தோட்டக் கம்பெனியினதும் வருடாந்த வருமானம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

28.

2623/2022

கௌரவ டீ. வீரசிங்க,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கித்துல் சார்ந்த கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கித்துல் அபிவிருத்திச் சபையால் இன்றளவில் அடையாளங் காணப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பிரதேசங்களில் கித்துல் சார்ந்த உற்பத்திகள் மேற்கொள்ளப் படுகின்றனவா என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் கித்துல் சார்ந்த கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரையில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள கித்துல் சார்ந்த உற்பத்திகளின் அளவு யாதென்பதையும்;

(ii) அதன் மூலமாக கிடைத்த ஏற்றுமதி வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

29.

3147/2022

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள பதிவு செய்யப்பட்ட தும்பு ஆலை உரிமையாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மின்சாரக் கட்டண உயர்வு காரணமாக தும்புக் கைத்தொழிலுக்கு பாரியளவில் எதிரிடையான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) அதன் காரணமாக இழக்கப்படுகின்ற நேரடி மற்றும் மறைமுகத் தொழில்களின் எண்ணிக்கை தனித் தனியாக யாது என்பதையும்;

(iv) தும்பு ஆலை உரிமையாளர்களைப் பாதுகாப்பதற்காக, தும்பு ஆலைகளின் மின்சாரக் கட்டணம் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) தும்பு சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதால் ஈட்டப்படுகின்ற ஆண்டு வருமானம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

30.

3153/2022

கௌரவ சுதத் மஞ்சுல,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கேகாலை மாவட்டத்தில் இறப்பர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள மொத்த நிலப் பரப்பின் அளவு யாதென்பதையும்;

(ii) அவற்றுள்அரசாங்கத்திற்குச் சொந்தமான மற்றும் தனியார் துறையினருக்குச் சொந்தமான நிலப் பரப்புக்களின் அளவு தனித் தனியே யாதென்பதையும்;

(iii) கேகாலை மாவட்டத்தில் இறப்பர் செய்கையை விஸ்தரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

31.

675/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை, பொலன்னறுவை மாவட்டத்திற்கென வழங்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய உரிமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அத்தகைய உரிமம்பெற்ற ஒவ்வொருவரினதும் பெயர் மற்றும் முகவரி என்பன தனித்தனியாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி உரிமங்களை வழங்குவதன் மூலம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஈட்டிய வருமானம் எவ்வளவு என்பதையும்;

(iv) எரிபொருள் நிரப்பு நிலைய உரிமங்களை வழங்கும்போது கவனத்தில் கொள்ளப்படும் அளவுகோல்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

32.

1897/2022

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் இலங்கை மின்சார சபை பெற்றுள்ள இலாபம்/நட்டம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது காணப்படுகின்ற மின் தேவைக்கு ஏற்ப வழங்கலை மேற்கொள்ள முடியாத காரணத்தினால் தனியார் துறையிலிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி தீர்மானத்தின் காரணமாக இலங்கை மின்சார சபைக்கு ஏற்க வேண்டியேற்படுகின்ற மேலதிகச் செலவு எவ்வளவு என்பதையும்;

(iv) அவசர மின் கொள்வனவுகளை இயன்றளவு குறைப்பதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

33.

2647/2022

கௌரவ காமினி வலேபொட,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மன்னார் கடற்படுகையில் வலுசக்தி படிவொன்று காணப்படுகின்றது என்பதையும்;

(ii) பல்வேறு வெளிநாட்டுக் கம்பனிகளுடன் ஒருங்கிணைந்து இலங்கை அரசாங்கம் வலுசக்தி படிவுகள் தொடர்பில் ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி ஆராய்ச்சிகளின் இறுதி முடிவுகள் யாவை என்பதையும்;

(ii) வலுசக்தி படிவுகள் காணப்படுமாயின், அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு அவற்றைப் பயன்படுத்துவதில் காணப்படும் தடைகள் யாவை என்பதையும்;

(iii) அகழ்வுப் பணிகள் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மன்னார் கடற்படுகையில் வலுசக்தி படிவுகள் தொடர்பிலான ஆராய்ச்சிப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

34.

2691/2022

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சூரிய படலங்கள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வது தொடர்பில் இதற்கு சுமார் 6 மாதங்களுக்கு முன்னர் டென்மார்க் அரசாங்கத்தினால் விருப்பறிவிப்பு முன்வைக்கப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி விருப்பறிவிப்பு தொடர்பில் இதுவரை அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி விருப்பறிவிப்பு தொடர்பில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

35.

2172/2022

கௌரவ ரோஹண பண்டார,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவுச் சிக்கன கடனுதவிச் சங்கத்திற்கு துண்டுப் பிரசுரங்களை அச்சிடுவதற்காக விலை மனுக்கள் கோரப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அதற்கான விலை மனுக்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும் பெயர் மற்றும் முகவரி என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினாலும் துண்டுப் பிரசுரமொன்றை அச்சிடுவதற்காக முன்வைக்கப்பட்ட விலை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விலைமனு பாணந்துறை, "சசுர பிரின்டர்ஸ்" நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அது தொடர்பில் பாரிய எதிர்ப்பு கிளம்பியுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

36.

297/2022

கௌரவ வசந்த யாப்பாபண்டார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிலிமத்தலாவை முதல் நானுஓயா வரையில் பாய்ந்தோடும் கால்வாயானது நீர்ப்பாசனக் கால்வாய்களின் கீழ் வருகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி கால்வாய் உள்ளடங்கும் வகை யாது என்பதையும்;

(iii) கால்வாயின் இருபுறமும் கரைகள் இடிந்து விழுந்துள்ளதால் கால்வாய் தடைப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) கால்வாயின் கரைகளை முறையாகப் புனரமைத்து அதனை சுத்தம் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

37.

3150/2022

கௌரவ லலித் எல்லாவல,— *நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு*,— (1)

(அ) (i) "*வாரி சௌபாக்யா*" வேலைத்திட்டத்தின் *கீழ்* பண்டாரகம கமநல சேவைகள் நிலையத்துக்குச் சொந்தமான வேவிட்ட வாவியின் வண்டல் மண்ணை அகற்றி அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மேற்பார்வையின் *கீழ்* 2021.02.07 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இன்றளவில் மேற்குறிப்பிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) இதன் காரணமாக குறிப்பிட்ட பிரதேசத்தின் விவசாயிகள் சிரமத்துக்கு உட்பட்டுள்ளனர் என்பதையும்;

(iv) மேற்படி வாவியின் இரு மருங்கிலுமான வாவியின் கட்டுகள் வீதிக்கு சேதமேற்படும் வகையில் வெட்டப்பட்டுள்ளமையினால், வேவிட்ட மைத்திரி மகா வித்தியாலயத்தின் பக்கமாக மிகவும் அபாயகரமான நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அபாயகரமான நிலைமையினை இல்லாதொழிப்பதற்கு நீர்ப்பாசன அமைச்சு மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் என்பன இன்றளவில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) வாவியின் அபிவிருத்தி நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளாமையிட்டு பொறுப்புவாய்ந்த அலுவலர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iii) அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறைவுசெய்து, பிரதேச விவசாயிகளின் வயல்நிலங்களில் பயிர் செய்கை மேற்கொள்வதன் நிமித்தம் பயன்படுத்துவதற்கு இது வழங்கப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

38.

5/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், வெளிநாடுகளில் ஏற்பட்ட விபத்துக்களினால் தற்காலிக இயலாமைக்கு, முழுமையான இயலாமைக்கு உள்ளாகிய மற்றும் மரணமடைந்த இலங்கை புலம்பெயர் ஊழியர்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) இவர்களுக்காக அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, வெளிநாடுகளில் பணிபுரியும்போது நிரந்தரமாக இயலாமைக்கு உள்ளாகும் இலங்கை ஊழியர்களுக்கு இலவசமாக ஒரு வீட்டைக் கட்டிக்கொடுக்கும் அல்லது இவர்களின் விருப்பத்திற்கு அமைவாக அதற்கொத்த நலனை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளதா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

39.

4/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை, இலங்கையில் இரட்டைப் பிரசாவுரிமை பெறுவதற்காக விண்ணப்பித்துள்ள நபர்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டுவாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

(ii) அவர்களில், இரட்டைப் பிரசாவுரிமை வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டுவாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) இரட்டைப் பிரசாவுரிமை பெறுவதற்கு விண்ணப்பித்த திகதியிலிருந்து அதனை வழங்குதல் வரையான செயன்முறைக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒரு காலப்பகுதி உண்டா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

40.

344/2022

கௌரவ ஹேஷா விதானகே,— முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “தாமரைக் கோபுரம்” கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(v) “தாமரைக் கோபுரத்தை” பொது மக்கள் பார்வையிடுவதற்காக திறக்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) “தாமரைக் கோபுரம்” கருத்திட்டத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி முதலீடுகள் யாவை என்பதையும்;

(iii) இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு மேற்படி கருத்திட்டத்தை எவ்வகையில் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

41.

1108/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "நல்லாட்சி அரசாங்கம்" ஆட்சியிலிருந்த காலப்பகுதியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடியில், இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகத்தர்களும் தொடர்புபட்டிருந்தார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) பிணைமுறி மோசடி தொடர்பான புலனாய்வுகளின் போது மேற்படி மோசடியுடன் தொடர்புபட்டிருந்ததாகக் கண்டறியப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு எதிராக இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

42.

2564/2022

கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டளவில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பயனாளர் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்த நிதியத்திலுள்ள பணம் முதலீடு செய்யப்பட்டுள்ள மூலங்கள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய முதலீடுகளால் ஈட்டப்பட்டுள்ள இலாபம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை 'சிரம சுவ ரெக்கவரண' நிகழ்ச்சித்திட்டத்தின் பயனாளர் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி பயனாளர்களுக்கென செலவிட்டுள்ள முழுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை, மேற்படி அனுகூலத்தைப் பெறுகின்ற குடும்பங்களிலுள்ள புலமைப் பரிசில் பெறுபவர்களுக்கென செலவிட்டுள்ள முழுத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

43.

2601/2022

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை இலங்கை பெற்றுக்கொண்டுள்ள வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கடனின் அளவு ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கடனும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிறுவனம்/ நாடு தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கடனுக்காகவும் செலுத்தப்படுகின்ற தவணைப்பணம் மற்றும் வட்டி தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

44.

2724/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட சென்ரல் இன்வெஸ்ட்மன்ட் அன்ட் பைனான்ஸ் (Central Investment and Finance PLC - CIFL) எனும் பெயரிலான நிதி நிறுவனமொன்றுக்கு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கி அனுமதி வழங்கியிருந்ததா;

(ii) மேற்படி நிறுவனம் அதன் வைப்பாளர்களின் பணத்தை அவர்களுக்கு மீள்செலுத்தவில்லை என்பதை அறிவாரா;

(iii) மேற்படி நிறுவனம் கடனிறுக்க வகையின்மைக்கு உள்ளாகியமை தொடர்பில் இலங்கை மத்திய வங்கி விசாரணை மேற்கொண்டுள்ளதா;

(iv) மேற்படி விசாரணை அறிக்கையின் விதப்புரைகள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) மேற்படி வைப்பாளர்களின் பணத்தை மீள் செலுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

45.

1109/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ''நல்லாட்சி அரசாங்கம்'' ஆட்சியிலிருந்த காலப்பகுதியில் பாதுகாப்புச் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்ட நாட்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி கூட்டங்களில் அப்போதைய பிரதம அமைச்சர் பங்கேற்ற நாட்களின் எண்ணிக்கை மற்றும் பங்கேற்காத நாட்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுதின தாக்குதலுடன் தொடர்புடையதாக குற்றஞ்சாட்டப்பட்ட அரசியல்வாதிகள், பாதுகாப்புப் பிரிவு அலுவலர்கள் மற்றும் நிர்வாக அலுவலர்களின் பெயர்கள் தனித்தனியே யாவை;

(ii) மேற்படி தாக்குதல் தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

46.

3151/2022

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் நிதமும் வெள்ளப்பெருக்குகளும் மண்சரிவுகளும் ஏற்படுகின்றன என்பதை அறிவாரா;

(ii) அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு/குறைப்பதற்கு இன்றளவில் வேலைத்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், அவ்வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் பிரதேசங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

47.

968/2022

கௌரவ சாணக்கியன் இராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலகத்துக்கென கணக்காளரொருவர் நியமிக்கப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலகத்துக்கு கணக்காளரொருவரை நியமிப்பதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று, களுவாஞ்சிக்குடி மற்றும் போரத்தீவுபற்று ஆகிய மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளினதும் சனத்தொகை அதிகமென்பதால் மேற்படி ஒவ்வொரு பிரிவையும் இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பதற்கு இன்றளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) இது தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

48.

1516/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள மொத்த குடும்பங்களில் நிரந்தர வீடற்ற குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தாபிக்கப்பட்ட நாளிலிருந்து மேற்படி அதிகாரசபையினால் இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ள, உதவிகள் வழங்கப்பட்டுள்ள மற்றும் கடன் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை மேற்படி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள மற்றும் உதவிகள் அளிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களை திறந்து வைக்கும் போது, அதன் பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

49.

2553/2022

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை, கல்வி அலுவல்கள் பற்றிய சனாதிபதி செயலணியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், மோசடி அல்லது சட்ட விரோதச் செயல் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துகள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i)இல் தெரிவிக்கப்பட்டுள்ள செயல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், இவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) எதிர்காலத்தில் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயல்களைத் தடுப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

50.

2641/2022

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கைத்தொழிற்சாலைகள் மற்றும் வேறு நிர்மாணத் தளங்களிலிருந்து அதிகளவில் கழிவுகள் ஆறுகளில் இடப்படுகின்றன என்பதையும்;

(ii) சில நிர்மாணங்களுக்கு முறையான ஆய்வுகளின்றி சுற்றாடல் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆறுகளில் கழிவுகளை இடுகின்ற கைத்தொழிற்சாலைகள்/ நிறுவனங்களை விழிப்புணர்வூட்டி அவ்வாறு கழிவுகள் இடப்படுவதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆறுகளில் கழிவுகளை இடுகின்றதாக இன்றளவில் அடையாளங்காணப்பட்டுள்ள கைத்தொழிற்சாலைகள்/நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி கைத்தொழிற்சாலைகள்/ நிறுவனங்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கண்டிய திருமண, மணநீக்கம் (திருத்தம்),— (113 ஆம் அத்தியாயமான) கண்டிய திருமண, மணநீக்கச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும் 2022 ஆகஸ்ட் 09 மற்றும் 12 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினால் தடைபெறாமல், 2022 ஒக்தோபர் 04 ஆம் திகதி முதற்கொண்டு, ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரின் போதான செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்கப் பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 27 ஆம் இலக்கப் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— தேசியப் பேரவையை ஸ்தாபிப்பதற்கான தீர்மானம் மீதான திருத்தம்,— 2022 செப்தெம்பர் 20 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தில் பந்தி (ஈ) ஐ உடனடுத்து பின்வரும் பந்திகள் சேர்க்கப்படுவதன் மூலம் அத்தீர்மானமானது திருத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

"(உ) தேசியப் பேரவையானது எவரேனுமாளை அதன் முன்னர் அழைத்து விசாரிக்கவும், ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணங்களைக் கேட்டுப் பெறுவதற்கும் பரிசீலனை செய்வதற்கும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்; மற்றும்

(ஊ) பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளிலுள்ள குழுக்களுக்கான பொது விதிகள் தேசியப் பேரவைக்கும் ஏற்புடையதாகும்."

*2.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் எச்சீஎல் டெக்னொலஜீஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 03 ஆம் திகதிய 2291/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 யூலை 27 ஆம் திகதிய 2290/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதர உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 2294/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.09.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதர உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 2294/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மீள ஒப்படைத்தல் சட்டத்தின் கீழ் கட்டளை,— தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும்இடையே மீள ஒப்படைத்தல் பொருத்தனை தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2022 மே 31 ஆம் திகதிய 2282/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.08.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துதல்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2022 செப்தெம்பர் 22),— “பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 8, 9, 19, 50, 52, 54, 55, 57, 58, 68, 70, 72, 111, 112, 119, 120, 121 மற்றும் 122 ஆகியவற்றை திருத்துதல் தொடர்பாக 2022 செப்தெம்பர் 07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவின் அறிக்கையின் பின்வரும் விதப்புரைகள் ஏற்றுக்கொள்ளப்படுமாக:-

**1. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

8. (1) பாராளுமன்றம் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி, ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது ஞாயிற்றுக்கிழமைக்குப் பின்னர் தொடங்குகின்ற வாரத்திலும் ஒன்றுவிட்ட அடுத்த வாரத்திலுமாக மாதந்தோறும் முதலாவதும் மூன்றாவதுமான வாரங்களில் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் பாராளுமன்றம் கூடுதல் வேண்டும்.

(2) பாராளுமன்ற அமர்வு மு.ப. 9.30 மணிக்கும் ஆரம்பமாகும்:

ஆயினும், சனாதிபதி அவர்களால் கூட்டப்படும் அமர்வொன்று அதற்காக சனாதிபதி அவர்களால் மேற்கொள்ளப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பிடப்பட்ட நேரத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

(3) பாராளுமன்றம் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி, பாராளுமன்ற கூட்ட தினங்களில் பி.ப. 12.30 மணிக்கு பரிசீலனையிலிருக்கும் ஏதேனும் அலுவல் மீதான நடவடிக்கைகள் வினாவின்றி இடைநிறுத்தப்பட்டு, பி.ப. 1.00 மணிக்கு மீளத் தொடங்கப்படும்.

(4) சபாநாயகரால், பி.ப. 5.30 மணிக்கு வினாவின்றிப் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படல் வேண்டும்.

(5) பி.ப. 4.30 மணிக்கு பரிசீலனையிலிருக்கும் எவ்வலுவலின் மீதிலுமான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படல் வேண்டும். அவ்வேளையில் பாராளுமன்றம் குழுநிலையிலிருந்தால், தலைமைதாங்கும் உறுப்பினர் அக்கிராசனத்தை விட்டகன்று பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடல் வேண்டுமென்பதுடன். பாராளுமன்றத்தையோ விவாதத்தையோ ஒத்திவைப்பதற்காக அல்லது குழுநிலையில் தலைமைதாங்கும் உறுப்பினர் முன்னேற்றத்தை அறிவிக்க வேண்டுமென்பதற்காகவோ அல்லது அவர் அக்கிராசனத்தை விட்டகல வேண்டுமென்பதற்காகவோ பிரேரணையொன்று பிரேரிக்கப்பட்டால், அத்தகைய தடங்கற் பிரேரணை ஒவ்வொன்றும் வினாவின்றியே வலுவற்றதாதலும் வேண்டும்:

ஆயினும், அலுவலை இடைநிறுத்தும்போது எப்பொழுதும் 46 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் விவாதம் முடிவுறுதல் பிரேரிக்கப்படலாம். அவ்வாறு பிரேரிக்கப்பட்டால் அல்லது அந்நிலையியற் கட்டளையின் கீழ் நடவடிக்கைகள் நிகழ்ந்துகொண்டிருந்தால், அந்நடவடிக்கைகளின் விளைவான விடயமும் அதே நிலையியற் கட்டளையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேறெந்தப் பிரேரணையினதும் விடயமும் தீர்வு காணப்படும்வரை சபாநாயகரோ தலைமைதாங்கும் உறுப்பினரோ அக்கிராசனத்தை விட்டகலலாகாது.

(6) பரிசீலனையிலிருக்கும் அலுவல் பி.ப. 4.30 மணிக்கு முடிவாக்கப்பட்ட பின்னர் உறுப்பினரொருவர் எதிர்ப்புத் தெரிவிக்கும் அலுவலெதுவும் பரிசீலனைக்குட்படுத்தப் படுதலாகாது.

(7) இந்நிலையியற் கட்டளையின் (4) மற்றும் (5) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் சபை அலுவலை முடிவுறுத்தும் நோக்கத்துக்காக அமைச்சரவையின் அமைச்சரொருவரினால் முன்னறிவித்தலின்றி மேற்கொள்ளப்பட்ட பிரேரணை சமுகமளித்திருக்கும் பெரும்பாலான உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்படின், பாராளுமன்றத்தினால் அமர்வு நேரம் நீடிக்கப்படலாம்.

**2. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 9 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

9. பொது அலுவல்கள் ஆரம்பத்தின்போது அமைச்சரவையின் அமைச்சரொருவரினால் திருத்தம் அல்லது விவாதமின்றி குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் அலுவல்கள் மீதான நடவடிக்கைகள் குறிப்பிட்ட தினமொன்றின் அமர்வில் 8 ஆம் நிலையியற் கட்டளை ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்ற பிரேரணையொன்றை மேற்கொள்ளலாம் என்பதுடன் அத்தகைய பிரேரணை ஏற்றுக்கொள்ளப்படின், அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட அலுவலானது, அலுவலை இடைநிறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அது கலந்துரையாடலின்கீழ் இருப்பின் இடைநிறுத்தப்படுதலுமாகாது; அத்துடன் அது எதிர்க்கப்பட்டபோதிலும் எந்நேரத்திலும் அவ்வலுவல் எடுக்கப்படலாம்.

ஆயினும், 8 ஆம் நிலையியற் கட்டளையின் செயற்பாட்டிலிருந்து விலக்குப்பெற்ற அலுவல்கள் பி.ப. 4.30 மணிக்குப் பின்னர் முடிவுறும்போது, விலக்குப்பெற்ற அலுவல்கள் இறுதி விடயம் முடிவுற்றதும் சபாநாயகர் வினாவின்றிப் பாராளுமன்றத்தை உடனடியாக ஒத்திவைத்தல் வேண்டும்.

**3. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 19 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

19. (1) கேள்விகளின் இறுதியில் உறுப்பினரொருவர் தமது இருக்கையிலிருந்து எழுந்து நின்று திட்டவட்டமான அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்றை எடுத்துரைத்து, அவ்வலுவலை விவாதிப்பதற்காகப் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும் பிரேரணையைப் பிரேரிக்க அனுமதி கேட்கும் சந்தர்ப்பத்தில் தவிர, பொது அலுவல்கள் எடுத்துக்கொள்ளப்படும் வரை அமைச்சரவை அமைச்சரொருவராலன்றி, உறுப்பினர் ஒருவரினால் பாராளுமன்ற ஒத்திவைப்பிற்கான பிரேரணையொன்றைச் சமர்ப்பிக்க முடியாது.

(2) உறுப்பினரொருவரால் 1 ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் அத்தகைய பிரேரணையொன்றைப் பின்வரும் சந்தர்ப்பங்களிலன்றிப் பிரேரிக்க இயலாது:-

(அ) சம்பந்தப்பட்ட பிரேரணையைப் பிரேரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தினத்தன்று அமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் அப்பிரேரணை பற்றிச் சபாநாயகருக்கு எழுத்துமூலம் அறிவித்து அவரது இணக்கத்தைப் பெற்றிருத்தல்; அத்துடன்

(ஆ) உரிய உறுப்பினரால் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றிருத்தல்; அல்லது

(இ) பாராளுமன்றத்தின் அனுமதி வழங்கப்படாதவிடத்து இருபதுக்குக் குறையாத உறுப்பினர்கள் அவ்வுறுப்பினரை ஆதரித்துத் தத்தம் இடங்களில் எழுந்து நின்றால்;

தவிர (1) ஆவது பந்தியின் கீழ் அவ்வாறானதோர் பிரேரணை உறுப்பினர் ஒரவரினால் சமர்ப்பிக்கப்படலாகாது:

ஆயினும், சபாநாயகர் இணங்க மறுக்குமிடத்து அல்லது விவாதிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரேரணை ஒழுங்கற்றதென அபிப்பிராயப்படுமிடத்து அவர் அப்பிரேரணை பற்றிய முன்னறிவித்தலை அல்லது சபாநாயகரால் அனுமதிக்கப்பட்டவாறு அதன் ஒரு பகுதியை வாசிப்பதற்கு அனுமதி வழங்கி அதன் பின்னர் சபாநாயகர் அதற்கு இணங்க மறுத்தமைக்கான அல்லது ஒழுங்கற்றதென அபிப்பிராயப்பட்டமைக்கான காரணத்தைக் கூறுதலும் வேண்டும்.

(3) பிரேரணை அவ்வாறு ஆதரிக்கப்பட்டால் அல்லது பாராளுமன்றம் அனுமதி வழங்கினால் அப்பிரேரணை தொடர்பாக பி.ப. 3.30 மணிக்கு பாராளுமன்றத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(4) எந்தவொரு தினத்திலும் ஒன்றிற்கு மேற்பட்ட அத்தகைய பிரேரணைகளிற்கு அனுமதி கோரலாகாது.

(5) அரசாங்க அலுவல்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் தினங்களில், இந்நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின்கீழ் முன்வைக்கப்படும் பிரேரணையைத் தவிர பாராளுமன்றத்தினை ஒத்திவைப்பதற்கான அத்தகைய பிரேரணையெதுவும் அமைச்சரவையின் அமைச்சரொருவராலன்றி அத்தினத்திற் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களுக்கிடையே பி.ப 4.30 மணிக்கு முன்னர் பிரேரிக்கப்பட இயலாது.

**4. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 50 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

50. (1) அரசியலமைப்பின் 78 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கமைய, எவரேனும் அமைச்சரவையின் அமைச்சர் முன்னறிவித்தலின் பின்னர், சட்டமூலமொன்றை அறிமுகப் படுத்துவதற்காக பாராளுமன்றத்தின் கட்டளையின்றி, அதனைச் சமர்ப்பிக்கலாம். பொது அலுவல்கள் ஆரம்பத்தில் சட்டமூலமொன்று அவ்வாறு அறிமுகப்படுத்தப்படும்போது, சட்டமூலத்தின் தலைப்பு செயலாளர் நாயகத்தினால் வாசிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சட்டமூலமானது அப்போது முதலாவது முறையாக மதிப்பிடப்பட்டுள்ளதென்றும் அச்சிடப்படுவதற்குக் கட்டளையிடப்பட்டுள்ளதென்றும் கருதப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்கு முற்படாத ஒரு திகதியன்று இரண்டாம் மதிப்பீட்டிற்காக நிர்ணயிக்கப்பட வேண்டும்:

ஆயினும், அரசியலமைப்பின் 122 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள அவசர சட்டமூலமொன்று அமைச்சரவையின் ஓர் அமைச்சர் அல்லது பிரதி அமைச்சரால் பணிக்கப்படும் திகதியொன்றில் இரண்டாம் மதிப்பீட்டிற்காக நிர்ணயிக்கப்பட வேண்டும்.

(2) முதலாம் மதிப்பீட்டின் பின்னர் அத்தகைய சட்டமூலம் பிரேரணை எதுவுமின்றி உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும். குழுவானது சட்டமூலத்திற்குத் திருத்தங்களைப் பரிந்துரைக்கலாம். குழுவானது பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும் வரை அல்லது பாராளுமன்றத்தினால் அறிக்கையிடுவதற்காக வழங்கப்பட்ட காலம் முடியும் வரை சட்டமூலம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படலாகாது.

(3) அமைச்சரவையின் கருத்துக்கு அமைய தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு அல்லது அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய ஏதேனும் விடயத்துக்கு உடனே தேவைப்படும், அது பற்றி அமைச்சரவை செயலாளரின் கையொப்பத்தையுடைய குறிப்பினைக் கொண்ட, ஒரு சட்டமூலத்துடன் தொடர்புடைய சனாதிபதியினால் பிரதமநீதியரசருக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஆவணத்தின் பிரதியொன்று அரசியலமைப்பின் 122(1) உறுப்புரைக்கு அமைய சபாநாயகருக்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தில், அரசியலமைப்பின் 122(1)(இ) சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய சபாநாயகருக்கு உயர்நீதிமன்றத்தினால் அதன் தீர்ப்பு வழங்கப்படும்வரை அச் சட்டமூலம் நிகழ்ச்சிநிரலில் சேர்த்துக்கொள்ளப்படலாகாது.

**5. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 52 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

52. (1) ஒரு சட்டமூலத்தைச் சமர்ப்பிக்க விரும்பும் தனியார் உறுப்பினர் எவரும், சட்டமூலத்தின் நோக்கம், முக்கிய அம்சங்கள் ஆகியவற்றைத் தெரிவித்து அச்சட்டமூலத்தைச் சமர்ப்பிப்பதற்குப் பாராளுமன்றத்தின் அனுமதி கோரி விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஒரு பிரேரணை உருவில் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விண்ணப்பத்தைச் செய்யும் உறுப்பினர், அவரது உத்தேச சட்டமூலத்தின் பிரதிகளைச் சிங்களத்திலும் தமிழிலும், ஆங்கில மொழிபெயர்ப்புடன் அப்பிரேரணையின் பிரதியுடன் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(3) செயலாளர் நாயகம் அச்சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானதா மற்றும் அரசியலமைப்புக்கான பதின்மூன்றாம் திருத்தத்தின் ஏற்பாடுகளிற்குட்படுகின்றதாவென்பது தொடர்பாகச் சட்டத்துறைத் தலைமையதிபதியின் கருத்தை அறிந்துகொள்வதற்காக அச்சட்டமூலத்தைச் சட்டத்துறை தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தல் வேண்டும். சட்டத்துறைத் தலைமையதிபதி ஆறு வார காலத்தினுள் தனது கருத்தினைப் பாராளுமன்றத்திற்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.

(4) சட்டத்துறைத் தலைமையதிபதியின் கருத்தினைப் பெற்றதன் பின்னர் செயலாளர் நாயகம் அச்சட்டமூலத்தைச் சிங்களத்திலும் தமிழிலும், ஆங்கில மொழிபெயர்ப்புடன் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு வகைசெய்தல் வேண்டும்.

(5) சட்டமூலமானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்கள் கழிந்ததன் பின்னர் எந்நேரத்திலும் மேற்படி (2) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பிரேரணை பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(6) பிரேரணை ஒன்று சபைக்கு விடப்பட்டு, அது ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதும் அல்லது சபையால் அனுமதி வழங்கப்படாதவிடத்து இருபதிற்கும் குறையாத உறுப்பினர்கள் அவ்வுறுப்பினரின் பிரேரணையை ஆதரித்துத் தத்தம் இடங்களில் எழுந்து நின்றால், அச்சட்டமூலம் முதலாம் மதிப்பீடு செய்யப்பட்டு அச்சிடுவதற்குக் கட்டளையிடப்பட்டதாகக் கருதப்படுவதுடன், அதன்மீது விவாதமெதுவும் மேற்கொள்ளப்படாது சட்டமூலத்தின் விடயங்களும் பணிகளும் தொடர்பாகக் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சருக்கோ அல்லது பிரதி அமைச்சருக்கோ அறிக்கையிடுவதற்காக ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும். அத்தகைய அமைச்சரோ அல்லது பிரதியமைச்சரோ இல்லாதவிடத்து சபாநாயகர் நியமிக்கும் வேறோரு அமைச்சருக்கோ அல்லது பிரதி அமைச்சருக்கோ ஆற்றுப்படுத்துவதுடன், சட்டமூலம் ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சரோ அல்லது பிரதி அமைச்சரோ பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும்வரை அச்சட்டமூலம் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படலாகாது.

(7) மேற்படி (6) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அல்லது அமைச்சருக்கு அல்லது பிரதி அமைச்சருக்குச் சட்டமூலம் ஆற்றுப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து ஆறுமாதங்கள் முடிவடைந்த பின் சம்பந்தப்பட்ட அமைச்சரினால் அல்லது பிரதி அமைச்சரினால் அறிக்கையெதுவும் சமர்ப்பிக்கப்படாவிடின், அச்சட்டமூலத்திற்குப் பொறுப்பான உறுப்பினர் விரும்பும் திகதிக்கு இரண்டாம் மதிப்பீட்டிற்காக அச்சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் இடப்படல் வேண்டும்.

**6. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 54 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

54. தனிப்பட்டவர்களின் உரிமைகளோ, நலன்களோ எந்தவொரு சட்டமூலத்தினாலும் தனித்தன்மையதாய் பாதிக்கப்படும் எச்சந்தர்ப்பத்திலும், அவ்வாறு பாதிக்கப்பட்ட எவரேனும் தரப்பினர் அத்தகைய சட்டமூலம் எந்தத் துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றதோ அந்தக் குழுவிற்கு மனுவொன்றை சமர்ப்பித்து, பாதிக்கப்பட்டவர் நேரடியாகவோ அல்லது வழக்குரைஞர் மூலமாகவோ அக்குழுவினால் செவிமடுக்கப்படலாம்.

**7. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 55 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

55. (1) அரசியலமைப்பின் 122 ஆம் உறுப்புரையின் கீழ் சட்டமூலமொன்று தவிர்ந்த, வேறு சட்டமூலமொன்று சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒருவாரத்திற்கு முற்படாத ஒரு திகதியின் இரண்டாவது மதிப்பீட்டிற்காக ஒதுக்கப்படல் வேண்டும்.

(2) ஏதாவது சட்டமூலமோ அல்லது அதிலுள்ள ஏதாவது ஏற்பாடோ அரசியலமைப்புக்கு முரணானதாகவுள்ளதா என்பதைத் தீர்மானிப்பதற்கு அரசியலமைப்பின் 121 ஆம் உறுப்புரையின்கீழ் உயர்நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் கோரப்பட்டு அது ஆற்றுப்படுத்தலின் அல்லது மனுவின் பிரதியொன்று சபாநாயகரிடம் ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பத்தில்:-

(அ) அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்டதன் பின்னர் அல்லது அத்தகைய மனு தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் கூடும் பாராளுமன்றத்தின் முதலாவது நாட் கூட்டத்தின்போது சபாநாயகரினால் அத்தகைய ஆற்றுப்படுத்தல் அல்லது மனு தாக்கல் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்குத் தெரிவிக்கப்படும்வரை அல்லது அத்தகைய ஆற்றுப்படுத்தலோ, மனுத்தாக்கலோ செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று வாரங்கள் முடியும்வரை இவற்றுள் எது முதலில் நிகழுகின்றதோ அதுவரை, அத்தகைய சட்டமூலம் தொடர்பாக எந்நடவடிக்கையும் எடுக்கப்படலாகாது.

(இ) உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு பெறப்பட்டதன் பின்னர் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினைச் சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அவ்வறிவித்தலின்மீது விவாதமெதுவும் அனுமதிக்கப்படுதலுமாகாது.

**8. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 57 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

57. சட்டமூலமொன்று இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டதும் அமைச்சரவையின் அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினர் அல்லாத அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் ஒருவரினால் பிரேரிக்கப்படும் பிரேரணையின் மேல் அச்சட்டமூலம் முழுப் பாராளுமன்றக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்:

ஆயினும், அமைச்சரவையின் அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினரல்லாத அமைச்சர் அல்லது பிரதி அமைச்சரினால் செய்யப்பட்ட பிரேரணையின்மேல் பாராளுமன்றம் அவ்வாறு முடிவுசெய்தால், வருடாந்த அல்லது குறைநிரப்பு ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தவிர்ந்த பிரிதொரு சட்டமூலமொன்று சபாநாயகரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டிய விசேட குழுவொன்றிற்கு அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படலாம்.

**9. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 58 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

58. சட்டமூலமொன்று விசேட குழுவிற்கு அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளபோது அக்குழுவானது அச் சட்டமூலம் பற்றி அறிக்கையிடும்வரை அச்சட்டமூலத்தின்மீது மேற்கொண்டு நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படுதலாகாது.

**10. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 68 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

68. சட்டமூலமொன்று ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள சட்டவாக்க நிலையியற் குழு அல்லது விசேட குழு அதன் விதப்புரைகளைத் தருகின்ற அறிக்கையொன்றைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன் அறிக்கையின் பிரதியொன்று ஒவ்வோர் உறுப்பினருக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.

**11. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 70 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

70. ஒரு சட்டமூலத்தின் சட்டவாக்க நிலையியற் குழுவொன்றின் அல்லது விசேட குழுவொன்றின் அறிக்கையைத் தவிசாளர் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் பாராளுமன்றம் பணிப்புரை விடுக்கும் தினத்தில் பரிசீலனை செய்யப்படுவதற்கென ஒதுக்கப்படல் வேண்டும். சட்டவாக்க நிலையியற் குழுவின் அல்லது விசேடகுழுவின் அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டபின் பாராளுமன்றம் அக்குழு செய்திருக்கும் திருத்தங்களை மட்டுமே பரிசீலிக்கும் எனினும் அத்திருத்தங்களை மேலும் திருத்தலாம். அவ் அறிக்கையைப் பரிசீலித்த பின் பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட குழுநிலையின் திருத்தங்கள் தவிர்ந்த புதிய திருத்தங்கள் எதையும் பாராளுமனத்தினால் செய்ய முடியாது. ஆனால் குழுவால் செய்யப்பட்ட திருத்தங்களைப் பற்றிய சட்டமூலம் மீண்டும் அக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படலாம்.

**12. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 72 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

72. (1) சட்டவாக்க நிலையியற் குழுவினால் திருத்தங்களின்றிப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்ட சட்டமூலமொன்று சட்டவாக்க நிலையியற் குழு அல்லது விசேட குழுவினால் பரிசீலனைக்கென நியமிக்கப்பட்ட நாளன்று உடனடியாக மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்படலாம்; அல்லது மூன்றாம் மதிப்பீடு பிற்போடப்பட வேண்டுமெனப் பாராளுமன்றம் பணித்தால் பிற்போடப்படலாம்.

(2) சட்டவாக்க நிலையியற் குழு அல்லது விசேடகுழு சட்டமூலத்தைத் திருத்தியிருந்தால் குழுவினால் செய்யப்பட்ட திருத்தங்களைப் பாராளுமன்றம் பரிசீலனை செய்து முடிந்தவுடன் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்படலாம்; அல்லது மூன்றாவது மதிப்பீடு பிற்போடப்பட வேண்டுமெனப் பாராளுமன்றம் பணித்தால் பிற்போடப்படலாம்.

**13. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 111 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

111. (1) தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான விடயங்களையும் பணிகளையும் கொண்ட துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் எண்ணிக்கை இருபதுக்கு மேற்படலாகாது.

(2) துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் ஒரு பாராளுமன்றம் தொடர்ந்திருக்கும் போது செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலோ அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டாலோ அதன் விசாரணைகளைத் தொடர்ந்து நடாத்துதலும் வேண்டும்.

(3) துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் அரசியலமைப்பின் 152 ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்ட சட்டமூலங்கள் தவிர குழுவிற்குப் பரிந்துரைக்கப்படும் ஏதேனும் சட்டமூலம், பொருத்தனை, குழுவின் விடயப்பரப்பெல்லையினுள் வரும் வருடாந்த அறிக்கை மற்றும் செயலாற்று அறிக்கை உட்பட மற்றும்/அல்லது ஏதேனும் குழு மற்றும்/ அல்லது அமைச்சரொருவர், எவ்விடயம் அல்லது தமது நியாயாதிக்கத்திற்குள்ளான விடயங்களும் பணிகளும் தொடர்பான வேறேதேனும் கருமம் தொடர்பாகப் பரிசோதனை செய்வதற்குத் தத்துவமுடையனவாதல் வேண்டும்.

(4) துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் அவற்றின் பொறுப்புக்களைப் பிரயோகிக்கின்ற சந்தர்ப்பங்களில் அவசியமானவை அல்லது பொருத்தமானவை என அவை கருதுகின்ற எவ்விடயம் தொடர்பாகவும் அத்தகைய புலனாய்வுகளையும் ஆய்வுகளையும் நடாத்தலாம்.

(5) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும் ஒவ்வொரு மாதமும் இரண்டு நாட்களுக்கு குறையாமல் கூடுதல் வேண்டும்.

(6) துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் பின்வரும் விடயங்களில் பாராளுமன்றத்திற்கு உதவுவதற்கென பொதுவான மேற்பார்வைப் பொறுப்புக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) தற்போதுள்ள அரசாங்க கொள்கைகளின் பிரயோகம், நிருவாகம், நிறைவேற்றுகை, மற்றும் பயனுடைமை ஆகியவை பற்றிய அதன் பகுப்பாய்வு, கணிப்பீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல்;

(ஆ) மாற்றுக் கொள்கைகளை வகுத்தமைப்பதற்கான எதிர்கால ஆராய்ச்சி மற்றும் எதிர்வுகூறலுக்கான அதன் செயற்பாடுகள்;

(இ) பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் பிரயோகம், நிருவாகம், நிறைவேற்றுகை, மற்றும் பயனுடைமை தொடர்பாகவும் ஏதேனும் புதிய அல்லது மேலதிகச் சட்டங்களை இயற்றுவதற்கான அவசியத்தை அல்லது விருப்பினைச் சுட்டிக் காட்டக்கூடிய நிலைமைகள், சூழ்நிலைகள் ஆகியவை பற்றிய பகுப்பாய்வு, கணிப்பீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல்;

(ஈ) ஏதேனும் சட்டம் அத்துடன் அவசியமான அல்லது பொருத்தமான மேலதிகச் சட்டவாக்கங்களை வகுத்தமைத்தல் பரிசீலித்தல் மற்றும் சட்டமாக்குதல் அல்லது ஏதேனும் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்துதல்.

(7) அந்தந்த துறைசார் மேற்பார்வைக் குழுவின் நியாயாதிக்கத்தினுள் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள அல்லது ஏதேனும் பதவியினை வகிப்பதற்குப் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ள எந்தவொரு நபரினதும் தகுதியினை பரிசோதனை செய்தலும் பொருத்தமான அமைச்சுக்கு அத்தகைய ஆட்கள் தொடர்பான விதப்புரைகளைச் செய்தலும்;

(8) பின்வருவோர் தவிர்ந்த எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏதேனும் துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர்களாகச் சேவையாற்றுவதற்குத் தகைமையுடையோராதல் வேண்டும்:-

(அ) சபாநாயகர்;

(ஆ) பிரதிச் சபாநாயகர்;

(இ) குழுக்களின் பிரதித் தவிசாளர்;

(ஈ) பிரதம அமைச்சர்;

(உ) பாராளுமன்ற சபை முதல்வர்;

(ஊ) பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்; அத்துடன்

(எ) அரசியலமைப்பின் 43(1) ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சரவை அமைச்சர்கள்.

(9) அரசியலமைப்பின் 45(1) ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் அத்தகைய அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் எந்த அமைச்சரவை அமைச்சரின் நோக்கெல்லையின்கீழ் பணியாற்றுகின்றாரோ அந்த அமைச்சரவையின் அமைச்சரின் ஏதேனும் விடயம், பணி, திணைக்களம் அல்லது நிறுவனம் என்பவற்றைப் போன்ற அதன் நியாயாதிக்கமும் தொடர்புபட்ட பணிகளும் உள்ளனவான ஏதேனும் துறைசார் மேற்பார்வைக் குழுவில் சேவையாற்றுவதற்குத் தகைமையுடையோராதலாகாது:

ஆயினும், சட்டமூலம் ஒன்று துறைவார் மேற்பார்வைக் குழுவில் கலந்துரையாடப்படும் சந்தர்ப்பத்தில் குழுவிற்கு உதவுவதற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினர் அல்லாத அமைச்சரை அல்லது பிரதி அமைச்சரை குழுவானது அதன் கூட்டத்திற்கு அழைக்கலாம்.

(10) தெரிவுக் குழுவானது துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு உறுப்பினர்களைப் பெயர்குறிக்கும் போது, பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு உரிய கவனம் செலுத்தி, அத்தகைய அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் தலைவர்களினால் செய்யப்பட்ட பெயர் நியமனத்திற்கு இணங்கச் செயற்படல் வேண்டும்.

(11) குறிப்பிட்ட துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினரல்லாத எவரேனும் பாராளுமன்ற உறுப்பினர் அக்கூட்டத்தில் நடைமுறைகளை அவதானிப்பதற்கு அக்குழுவின் தவிசாளரால் அனுமதிக்கப்படலாம்.

(12) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும் அதன் முதலாவது கூட்டத்திலும் அதன் பின்னர் தவிசாளர் பதவி வறிதாகிய பின்னர் கூடும் முதலாவது கூட்டத்திலும், துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர்களிடையேயிருந்து தவிசாளரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(13) ஏதேனும் துறைசார் மேற்பார்வைக் குழுவின் அனுமதியைப் பெறாமல் அத்தகைய குழுவின் மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு வருகை தராதிருக்கும் குழுவின் உறுப்பினர் அத்தகைய குழுவின் உறுப்பாண்மையை இழந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(14) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும் அது அவசியமெனக் கருதுமிடத்து, அவசியமானவையெனக் குழு கருதக்கூடியவாறான அத்தகைய கருமங்களைப் பரிசோதனை செய்து அத்தகைய குழுவிற்கு அறிக்கையிடுவதற்கு அதன் சொந்த உறுப்பினர்களிலிருந்து உபகுழுக்களை நியமிக்கலாம்.

(15) ஒரு துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயம் ஆற்றுப்படுத்துகைத் திகதியிலிருந்து ஆறு வாரங்கள் கழியும்வரை, பாராளுமன்றம் வேறுவகையாகப் பணித்திருந்தாலொழிய, பாராளுமன்றத்தினால் கவனத்திற்கெடுக்கப்படுதலாகாது. பாராளுமன்றமானது தீர்மானமொன்றின் மூலம் அத்தகைய காலப்பகுதியை தீர்மானிக்கப்படலாம்.

(16) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும், ஏதேனும் சட்டமூலம் அல்லது வேறு ஏதேனும் பகிரங்க முக்கியத்துவம் வாய்ந்த கருமம் தொடர்பாக எவரேனும் பாதிக்கப்பட்ட அல்லது அக்கறைகொண்ட எவரேனுமாளிடமிருந்து சான்று கோரலாம்.

(17) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும், ஆட்களை அழைப்பதற்கும் பத்திரங்களையும் பதிவேடுகளையும் கோருவதற்கும் தத்துவமளிக்கப்படுவதுடன் அவர்களின் முன்னர் எடுக்கப்பட்ட சான்றின் நிகழ்ச்சிக் குறிப்புகளுடன் சேர்த்து அவர்களின் அபிப்பிராயங்களையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(18) ஒரு துறைசார் மேற்பார்வைக் குழு சட்டத்தை இயற்ற அல்லது சட்டவாக்கம் சாராத அறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட விடயம் குறித்துரைக்கப்பட்ட மற்றும் அமைச்சுப் பொறுப்பைக் கொண்ட அமைச்சரவையின் அமைச்சர் மற்றும் அவ்வாறு ஒதுக்கப்படாவிட்டால், பிரதமர் அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்ட பரிந்துரைகளை எட்டு வாரங்களுக்குள் நிறைவேற்றி, அந்த அவதானிப்புகள் தொடர்பாக அவர் எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் குறித்த அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது குறிப்பிட்ட சிபாரிசு நிறைவேற்றப்படக்கூடாது என்று அமைச்சர் கருதினால், அதற்கான காரணங்களை அவர் எழுத்துமூலமாக விளக்கி அவர் முன்மொழிகின்ற மாற்று நடவடிக்கையை சுட்டிக்காட்டுதலும் வேண்டும். குழுவிற்குத் தேவைப்பட்டால் உரிய அமைச்சருக்கு விளக்கமளிப்பதற்கு குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைப்பு விடுக்க முடியும் என்பதுடன், அது தொடர்பில் எழும் கேள்விகளுக்கு, எட்டு வாரங்களுக்குள் பதிலளித்தலும் வேண்டும்.

(19) (அ) குழுவின் முன் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படும் ஒவ்வொரு விடயத்திலும் குழுவிற்கு உதவுவதற்கு 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட ஐந்திற்கு (5) மேற்படாத இளைஞர் பிரதிநிதிகளை தவிசாளர் அழைக்கலாம்.

(ஆ) தவிசாளரின் அனுமதியுடன், அவ்வாறு அழைக்கப்பட்ட இளைஞர் பிரதிநிதிகள், சாட்சிகளிடம் இருந்து கேள்விகளைக் கேட்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்பதோடு மற்றும் குழுவின் முன் ஆவணங்களைப் பரிசீலிக்கலாம்:

எவ்வாறாயினும், அந்த இளைஞர் பிரதிநிதிகள் குழுவில் வாக்களிக்க மாட்டார்கள்.

(இ) குழு தீர்மானிக்கின்றவாறான எந்தவொரு தீர்மானத்திற்கும் உட்பட்டு, அறிக்கைக்கான அநுபந்தம் ஒன்றாக குழுவின் அறிக்கையில் இளைஞர் பிரதிநிதிகளின் கருத்துகள், அவதானிப்புகள் மற்றும் அபிப்பிராயங்கள் உள்ளடக்கப்படுவதற்கு தவிசாளர் அனுமதியளிக்கலாம்.

(ஈ) இளைஞர் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான அளவுகோல்கள் தெரிவுக் குழுவினால் செய்யப்பட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

**14. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

112. (1) ஒவ்வொரு பாராளுமன்ற அமர்வின் ஆரம்பத்திலும் காலத்திற்கு காலம் தேவையானவாறு தெரிவுக்குழுவானது பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியவாறான அமைச்சரவை அமைச்சுக்களின் எண்ணிக்கைக்கு சமமான அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களை நியமிக்கலாம் :-

(அ) தவிசாளராக உரிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவை அமைச்சர்

(ஆ) இராஜாங்க அமைச்சர்,

(இ) பிரதி அமைச்சர், அத்துடன்

(ஈ) தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் வேறு ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள்.

(2) தனது கையொப்பத்தின் கீழான விண்ணப்பத்தின்மீது முன் அனுமதிபெறாமல் குழுவின் தொடரான மூன்று கூட்டங்களுக்கு சமூகமளிக்காதிருக்கும் எந்தவொரு உறுப்பினறும் அத்தகைய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் உறுப்புரிமையிலிருந்து நீங்கியதாக கருதப்படுவதோடு தெரிவுக்குழுவினால் இணக்கம் காணப்பட்டாலன்றி அதே கூட்டத்தொடரில் அத்தகைய குழுவுக்கு மீளநியமிக்கப்படுதலுமாகாது:

ஆயின், முதலில் பாராளுமன்றத்தில் பெற்ற அனுமதியுடன் பாராளுமன்ற அமர்வுகளிலிருந்து சமுகமளிக்காதிருக்கும் அத்தகைய உறுப்பினர் அத்தகைய காலப்பிரிவில் வரும் ஒரு நாளில் இடம்பெறுகின்ற அத்தகைய குழுவின் எந்தவொரு கூட்டத்திற்கும் முன்னைய ஏற்பாடுகள் ஏற்புடையதாகாது.

(3) தான் உறுப்பினராகவில்லாத ஒரு அமைச்சுசார் ஆலோசைனக் குழுவின் கூட்டத்திற்கு எவரேனுமொரு பாராளுமன்ற உறுப்பினரும் தவிசாளரின் அனுமதியுடன் கலந்து கொள்ளலாம் என்பதோடு தவிசாளர் கோருகின்றபோது அதிலிருந்து நீங்கிக்கொள்ளுதலும் வேண்டும்.

(4) எவரேனும் பாராளுமன்ற உறுப்பினரால் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் பரிசீலனை செய்வதில் தவிசாளர் அல்லது பாராளுமன்றத்தினால் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும் தீர்மானங்கள், கட்டளைகள் மற்றும் ஆவணங்கள் உள்ளிட்ட எந்தவொரு விடயங்கள் தொடர்பிலும் பரிசீலனைசெய்து அது தொடர்பில் அறிக்கையிடுவது அமைச்சுசார் ஆலோசைனக் குழுவின் கடமையாகும்.

(5) (அ) குழுவின் கூட்டமானது குறித்த அமைச்சின் செயலாளருடனான கலந்தாலோசனையுடன் கூட்டப்படலாம்.

(ஆ) அமைச்சுசார் ஆலோசைனக் குழுவானது தவிசாளர் ஊடாக எந்தவொரு சட்டமூலம் அல்லது பிரேரணையை முன்னெடுப்பதற்கும் தத்துவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

(6) ஒவ்வொரு அமைச்சுசார் ஆலோசைனக் குழுவும் தவிசாளரினால் அழைக்கப்படும் எச்சந்தர்ப்பத்திலும் கூடலாம். தவிசாளர் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்து தவிசாளரினால் ஆகக்குறைந்தது மாதத்திற்கு ஒருமுறையேனும் கூட்டமொன்றை ஏற்பாடுசெய்வதோடு அர்த்தமுள்ள நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிப்பது தொடர்பில் வகைகூறுதல் அனைத்து அமைச்சு செயலாளர்களதும் கடமையாக இருப்பதோடு காலத்தற்கு காலம் அதன் சிபாரிசுகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடலும் வேண்டும்:

ஆயின், அத்தகைய அமைச்சுசார் ஆலோசைனக் குழுவின் ஆகக்குறைந்தது மூன்று உறுப்பினர்களது எழுத்துமூல வேண்டுகோளின் பேரில் கூடிய விரைவில் ஒரு கூட்டம் கூட்டப்படலாம்.

(7) அமைச்சுசார் ஆலோசனைக் குழுவானது எவரேனுமாளை அதன் முன்னர் அழைத்து விசாரிக்கவும், ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பெற்று பரிசீலனை செய்வதற்கும் இடத்திற்கு இடம்செல்வதற்கும் தமக்கு ஆற்றுப்படுத்தப்படும் விடயங்களை பூரணமாக பரிசீலனை செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருப்பினும் கூடுவதற்கும் ஒவ்வொரு அமைச்சுசார் ஆலோசைனக் குழுவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(8) அமைச்சுசார் ஆலோசைனக் குழுவின் கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களை கொண்டதாக இருக்கவேண்டுமென்பதோடு உரிய கூட்டநடப்பெண் இல்லாதபோது அத்தகைய அமைச்சுசார் ஆலோசைனக் குழுவினை தொழிற்படுத்தாமலிருப்பது அதன் தவிசாளரது கடமையாதல் வேண்டும்.

(9) குழுக்களிற்கான பொது விதிகள் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களிற்கும் ஏற்புடையதாகும்.

**15. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

119. (1) தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவையின் அமைச்சர் அல்லாத பதினாறு உறுப்பினர்களைக் கொண்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) அரசாங்கச் செலவுகளை எதிர்நோக்குவதற்காகப் பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகைகளைக் காட்டுகின்ற கணக்குகளையும் குழு தக்கதெனக் கருதும் பாராளுமன்றத்தின் முன்னிடப்படும் பிற கணக்குகளையும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் உதவியுடன் பரிசோதித்தல் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் கடமையாதல் வேண்டும்.

(3) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, ஏதேனும் திணைக்களத்தின் அல்லது உள்ளூரதிகாரசபையின் பரிசோதனை செய்யப்பட்ட கணக்குகள், நிதிகள், நிதிசார் நடவடிக்கைமுறைகள், செயல்நிறைவேற்றம் மற்றும் பொதுவான முகாமை என்பன பற்றியும் அவற்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் விடயம் பற்றியும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும். அறிக்கையானது நிவாரண நடவடிக்கை தேவைப்படுகின்ற விடயங்கள் தொடர்பான அவதானங்கள் பொதுநிதியின் முறையான உபயோகத்தை உறுதிப்படுத்துவதற்கான சிபாரிசுகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(4) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவையின் அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களிற்குப் பொறுப்பான அமைச்சரவையின் அமைச்சர் களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புக்களையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வார காலப்பகுதியினுள் சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, அந்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவோ அல்லது அந்த சிபாரிசுகளை பூரணப்படுத்தமுடியாது என்பது அமைச்சர் கருதினால் அதற்கான காரணங்களை அவர் எழுத்துமூலமாக விளக்கி அவர் முன்மொழிகின்ற மாற்று நடவடிக்கைமுறைகளை சுட்டிக்காட்டுதலும் வேண்டும். குழு தேவைப்பட்டால், சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு நேரடியாக விளக்கமளிப்பதற்கு குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைப்பு விடுக்க முடியும் என்பதோடு அது தொடர்பில் எழும் கேள்விகளுக்கு, எட்டு வாரங்களுக்குள் பதிலளித்தலும் வேண்டும்.

(5) (அ) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவானது, திணைக்களங்களினதும் உள்ளூரதிகாரசபைகளினதும் எல்லாக் கணக்குகளினதும் நிதிகளினதும் முகாமையினதும் மீது பரிசோதனை செய்து குழுவிற்கு அறிக்கையிடுவதற்கு அவசியமென அது கருதும்போது அதன் சொந்த உறுப்பினர்களை உள்ளடக்கிய உபகுழுக்களை குழுவினால் பணிக்கப்பட்டவாறு நியமிக்கலாம்.

(ஆ) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அல்லது குழுவினால் நியமிக்கப்பட்ட ஏதாவது உபகுழுக்கள் தேவையானவாறு பாராளுமன்றத்திலோ அல்லது குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதாவது தொடர்புடைய நிறுவனங்களிலோ அமர்வுகளை நடத்தலாம்.

(இ) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களாகவிராத பாராளுமன்றத்தின் வேறு உறுப்பினர்கள் அத்தகைய குழுவின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்கு தவிசாளரின் அனுமதியுடன் அனுமதிக்கப்படலாம்.

(6) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அல்லது அதன் உபகுழுக்களில் எதுவும் அதன் கடமைகளைப் புரிவதற்காக எவரேனுமாளை அதன்முன்னர் அழைத்து வினவுவதற்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கோருவதற்கும், பரிசீலிப்பதற்கும் களஞ்சியங்கள், சொத்துக்கள் என்பனவற்றைப் பார்வையிடவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(7) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். குழு ஏற்றுக்கொள்ளத்தக்க நியாயமான காரணமின்றி குழுவின் தொடரான மூன்று கூட்டங்களுக்கு சமூகமளிக்காதிருக்கும் எந்தவொரு உறுப்பினறும் அவர் குழுவின் உறுப்புரிமையிலிருந்து நீங்கியவராக கருதப்படுவார்.

**16. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

120. (1) தெரிவுக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவையின் அமைச்சர் அல்லாத பதினாறு உறுப்பினர்களைக் கொண்ட அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) பாராளுமன்றத்தின் முன்னிடப்படும் பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள், அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட நிறுவனங்களின் கணக்குகள் மற்றும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழிலின் அல்லது வேறு பொறுப்புமுயற்சியின் கணக்குகளை கணக்காய்வாளர் தலைமையதிபதியின் உதவியுடன் பரிசோதனை செய்வது அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் கடமையாதல் வேண்டும்.

(3) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு, ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு உடமையாக்கப்பட்ட ஏதேனும் வியாபாரம் அல்லது வேறு பொறுப்புமுயற்சிகள் என்பவற்றின் பரிசோதனை செய்யப்பட்ட கணக்குகள், வரவுசெலவுத்திட்டங்கள் வருடாந்த மதிப்பீடுகள், நிதிகள், நிதிசார் நடவடிக்கைமுறைகள், செயல்நிறைவேற்றம் மற்றும் பொதுவான முகாமை என்பன பற்றியும் அவற்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் கருமம் பற்றியும் பாராளுமன்றத்திற்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அறிக்கையிடுதல் வேண்டும். அவ் அறிக்கையானது நிவாரண நடவடிக்கை தேவைப்படுகின்ற விடயம் தொடர்பான அவதானங்கள் பொது நிதியின் முறையான உபயோகத்தை உறுதிப்படுத்துவதற்கான சிபாரிசுகள் ஆகியவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(4) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படலாம். எனினும், குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் அல்லது அச் சிபாரிசுகள் நிறைவுசெய்யப்படலாகாது என்பது அமைச்சரின் கருத்தானால் அரசாங்க நிதியை முறையாக கையாளுவதற்கு பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கைமுறைகள் பற்றிய காரணங்கள் எழுத்துமூலம் விளக்கமளிக்கப்பட வேண்டுமென்பதுடன் அவ் அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டுமென சிபாரிசுசெய்யடும் மாற்று நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றும் முன்வைக்கப்படலாம். அவதானிப்புகள் அல்லது குறித்துரைக்கப்பட்ட நிறைவேற்றப்படமுடியாதுள்ள அவசியமெழாதென்பது அமைச்சரின் கருத்தாயின் அவரால் அதற்கான காரணங்கள் எழுத்துமூலம் முன்வைக்கப்பட வேண்டுமென்பதுடன் அவரால் பிரேரிக்கப்படும் நடவடிக்கைமுறைகள் குறிப்பிடப்பட வேண்டும். குழுவிற்கு தேவையாயின் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு விளக்கமளிப்பதற்கு குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைப்பு விடுக்க முடியும் என்பதுடன் அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும்.

(5) (அ) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவானது, ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு உடைமையாக்கப்பட்ட ஏதேனும் வியாபாரம் அல்லது வேறு பொறுப்புமுயற்சிகள் என்பவற்றின் எல்லாக் கணக்குகள்,

வரவுசெலவுத்திட்டங்கள் வருடாந்த மதிப்பீடுகள், நிதிகள், முகாமை என்பவை தொடர்பாகப் பரிசோதனை செய்து குழுவிற்கு அறிக்கையிடுவதற்கு அவசியமென அது கருதும்போது அதன் சொந்த உறுப்பினர்களை உள்ளடக்கிய எவையேனும் உபகுழுக்களை குழுவினால் பணிக்கப்பட்டவாறு நியமிக்கலாம்.

(ஆ) அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் அல்லது குழுவினால் நியமிக்கப்பட்ட எந்தவொரு உப குழுவிற்கும் தேவையானபோது பாராளுமன்றத்தில் அல்லது குழுவினால் தீர்மானிக்கப்படும் எந்தவொரு சம்பந்தப்பட்ட நிறுவனத்திலும் கூட்டத்தை நடாத்துவதற்கு சந்தர்ப்பமளிக்க முடியும்.

(இ) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களாகவிராத பாராளுமன்றத்தின் வேறு எவரேனும் உறுப்பினர்கள் குழுவின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்கு தவிசாளரின் அனுமதியுடன் அனுமதிக்கப்படலாம்.

(6) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு அல்லது அதன் உபகுழுக்களில் எவையும் அதன் கடமைகளைப் புரிவதற்காக எவரேனுமாளை அதன்முன்னர் அழைத்து வினவுவதற்கும் பரிசீலனை செய்வதற்காக ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கோருவதற்கும் களஞ்சியங்கள், சொத்துக்கள் என்பவற்றைப் பார்வையிடவும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(7) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் அனுமதியின்றி தொடர்ந்து மூன்று கூட்டங்களில் கலந்துகொள்ளத் தவறும் பாராளுமன்ற உறுப்பினர் அவரின் உறுப்புரிமையை விட்டுச் சென்றவராக கருதப்படுவார்.

**17. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 121 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

121. (1) தவிசாளர் எதிர்க்கட்சி உறுப்பினராகவிருத்தல் வேண்டுமென்ற வரையறைக்கு உட்பட்டு, தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவையின் அமைச்சர் அல்லாத தவிசாளரொருவரையும் பதினொரு உறுப்பினர்களையும் கொண்டுள்ளதுமான அரசாங்க நிதி பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) பின்வருவனவற்றைப் பரிசீலனை செய்வது அரசாங்க நிதி பற்றிய குழுவின் கடமையாதல் வேண்டும்:-

(அ) அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின்கீழ் வருமானங்ளைச் சேகரித்தல்;

(ஆ) திரட்டுநிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்தல்;

(இ) குறித்துரைக்கப்பட்ட சட்ட ரீதியான தேவைப்பாடுகளுக்காக அரசாங்க நிதிகளைப் பயன்படுத்துதல்;

(ஈ) அரசாங்க நிதிகளைப் பயன்படுத்துதல்;

(உ) நடப்பாண்டுக்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் பொருளாதார மந்தநிலைகள், ஒதுக்கீட்டைக் கைமாற்றுதல் மற்றும் எதிர்பார்க்கப்படாத மீதி;

(ஊ) நடப்பாண்டுக்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்;

(எ) பொதுக் கடனும் கடன் சேவையும்; மற்றும்:

(ஏ) 2003 ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின்கீழான அறிக்கைகளும் கூற்றுக்களும்;

(ஐ) அரசியலமைப்பின் 152 ஆம் உறுப்புரையின் கீழ் சட்டமூலங்கள், பிரேரணைகள், பிரேரணைகளுக்கான அங்கீகாரம் மற்றும் கட்டளைகள்

(3) பாராளுமன்றம் அல்லது ஏதேனும் குழு அல்லது அமைச்சரால் எந்தவொரு விடயத்தையும் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கு அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு முன்வைக்கப்படலாம்.

(4) குழுவானது, மேற்குறித்த (2) மற்றும் (3) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்களில் இருந்து எழுகின்ற பிரச்சினைகளை காலத்துக்காலம் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(5) ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை ஆரம்பிப்பதற்குமுன் குழுவினால்-

(i) மொத்த மதிப்பிடப்பட்ட செலவினத்தையும் அரசிறையையும் கணக்கிடுவதற்கான அடிப்படையாக பயன்படுத்தப்பட்ட அரசிறை நிதிசார் மற்றும் பொருளாதார ஊகங்களின் மீதான; மற்றும்

(ii) நிதி ஒதுக்கீடு அரசாங்கத்தின் கொள்கைகளுடன் இசைவாதல் பற்றிய;

அறிக்கை முன்வைக்கப்பட வேண்டும்.

(6) அரசாங்க நிதி பற்றிய குழுவினால் அறிக்கையொன்று பாராளுமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்படும்போது, அது நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்படுவதுடன் அதன் பின் அவ்வறிக்கை தொடர்பில் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைமுறைகள் எட்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(7) அரசாங்க நிதி பற்றிய குழுவினால் ஆட்களை அழைப்பதற்கும் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை வரவழைப்பதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன் பிரேரணைகள் மற்றும் அவதானிப்புகள் அடங்கிய அறிக்கை சாட்சிக் குறிப்புகளுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(8) கூட்ட நடப்பெண் நான்கு அங்கத்தவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**18. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 122 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

122. (1) தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவை அமைச்சர்கள் அல்லாத பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட பொது மனுக்கள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) முப்பதாம் நிலையியற் கட்டளையின் (10) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்களைக் கவனத்திற்கொள்ளுதல் அதன் கடமையாதல் வேண்டும்.

(3) பகிரங்க அலுவரொருவரால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம், உள்ளூரதிகாரசபை அல்லது அதேபோன்ற பிற நிறுவனமொன்றின் அலுவலரொருவரால் அடிப்படை உரிமை மீறப்படுதலை அல்லது வேறு அநீதி இழைக்கப்படுதலை ஏதேனும் மனு வெளிக்காட்டுகின்றதென பொது மனுக்கள் பற்றிய குழு கருதுமிடத்து, பொது மனுக்கள் பற்றிய குழு அத்தகைய மனுபற்றி விசாரணை செய்யலாம் அல்லது அத்தகைய மனுவை விசாரித்து அறிக்கையிடுவதற்காக நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்சுமான்) ஆற்றுப்படுத்தலாம்.

(4) பொது மனுக்கள் பற்றிய குழு, மனு ஒன்றை விசாரணை செய்த பின்னர் அல்லது பொது மனுக்கள் பற்றிய குழுவினால் நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளரிற்கு (ஒம்புட்சுமான்) ஆற்றுப்படுத்தப்பட்ட மனுவொன்று தொடர்பில் அவரது நுண்ணாய்வு முடிவுற்றதன்மேல் அவரால் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைக் கவனத்திற் கொண்டதன்பின்னர், அத்தகைய மனு அல்லது அறிக்கைமீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைபற்றி அதன் அபிப்பிராயத்தைப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடலாம்.

(5) பொது மனுக்கள் பற்றிய குழு, அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்கள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை பற்றிய அதன் அபிப்பிராயத்தை, காலத்துக்குக்காலம் தகுதியானவையென அது கருதக்கூடியவாறான அத்தகைய மனுக்கள் மீதான அத்தகைய வேறு அவதானிப்புக்களுடன் சேர்த்து மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(6) அறிக்கையானது சபாபீடத்தில் இடப்படும்போது, சபாநாயகர் அத்தகைய அறிக்கையின் உள்ளடக்கத்தினை எவரேனும் உரிய அமைச்சருக்கு அவரது அவதானிப்பு களுக்காக அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமென்பதுடன் அவ்வவதானிப்புகள் எட்டு வாரக் காலப்பகுதியினுள் அமைச்சரினால் எழுத்துமூலம் சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்படுதலும் வேண்டும்.

(7) எவரேனும் உரிய அமைச்சரின் அவதானிப்புகளைப் பெற்றபின்னர் சபாநாயகர் அத்தகைய அவதானிப்புகளின் பிரதியொன்றைத் தவிசாளருக்கும் மனுவைச் சமர்ப்பித்த பாராளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும். வழங்கப்பட்ட பதில் தொடர்பில் திருப்தியடைய முடியாதவிடத்து தகுந்த தீர்வுகளை முன்னெடுக்குமாறு அமைச்சரிடம் கோரப்பட வேண்டும். அமைச்சரினால் ஒரு மாதகாலத்திற்குள் தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதுடன் அதனை நிறைவேற்றாமைக்கான காரணங்களை எழுத்துமூலம் முன்வைப்பதுடன் கருத்திற்கொள்ளப்படும் மாற்று நடவடிக்கை குறிப்பிடப்பட வேண்டும்.

(8) பொது மனுக்கள் பற்றிய குழு, அவசியமென அது கருதும்போது அக்குழுவின் உறுப்பினர்களிலிருந்து பொது மனுக்கள் பற்றிய குழுவினால் பணிக்கக்கூடியவாறான அத்தகைய மனுக்களை அல்லது அறிக்கைகளைப் பரிசோதனை செய்து அறிக்கையிடுவதற்காக பொது மனுக்கள் பற்றிய குழுவின் அங்கத்துவ உறுப்பினர்களைக் கொண்ட உபகுழுக்களை நியமிக்கலாம்.

(9) பொது மனுக்கள் பற்றிய குழு அல்லது அதன் உபகுழுக்கள் எவையேனும் அவற்றின் கடமைகளைப் புரிவதற்காக எவரேனுமாளை அதன் முன்னர் அழைத்து விசாரிக்கவும், ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கேட்டுப் பெறுவதற்கும் பரிசீலனை செய்வதற்கும், களஞ்சியங்கள், சொத்துக்கள் என்பனவற்றைப் பார்வையிடுவதற்கும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(10) பொது மனுக்கள் பற்றிய குழுவின் கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். பொது மனுக்குழுவின் அனுமதியின்றி தொடர்ந்து மூன்று கூட்டங்களில் கலந்துகொள்ளத் தவறும் பாராளுமன்ற உறுப்பினர் அவரின் உறுப்புரிமையை விட்டுச் சென்றவராக கருதப்படுவார்" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*8.

அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

நொத்தாரிசு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

அற்றோணித் தத்துவம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

ஆவணங்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

அபாயகரமான விலங்குகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

விருப்பாவணங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

சிறுகோரிக்கை நீதிமன்றங்களின் நடவடிக்கைமுறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24

புனர்வாழ்வுப் பணியகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2021 நவம்பர் 24 ஆம் திகதிய 2255/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*26.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 64(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61(1)(ஆ) ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 பெப்ரவரி 07 ஆம் திகதிய 2266/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*27.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 ஏப்ரல் 25 ஆம் திகதிய 2277/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*28.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 126 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 மார்ச் 31 ஆம் திகதிய 2273/76 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.08.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

29.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

ஶ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.

சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.
றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.
“மாத்தறைப் பருவம்” அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.
ரதன திஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.
இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.
ஷைலி கல்விசார் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.
விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54.
முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

55.
களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

56.
தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.